# பரலோகம் உள்ளதா?

தேவன் இருக்கிறார் என்ற கருத்து நிலைநாட்டப்பட்டவுடன், அடுத்து, "பரலோகம் ஒன்று உள்ளதா?" என்ற கேள்வி வரலாம். பின்வரும் சிந்தனைகளைக் கவனியுங்கள்:

## பரலோகம் இல்லையென்றால் தேவன் அறிவற்றவர் என்றாகின்றது

தகுதியுடைய கனிகளான "அன்பு, சந்தோஷம், சமாதானம், பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்த, இச்சையடக்கம்" (கலா. 5:22, 23) ஆகியவற்றை எவ்விதம் விளைவிப்பது என்று தேவனுடைய புத்தகமானது மனிதர்களுக்குப் போதித்துள்ளது. பல மக்கள் இந்த ஒன்பது வித கனிகளை உண்டாக்கும்படி தங்களை அமைத்துக் கொண்டு வெற்றியடைந்துள்ளனர்.

கனிதரும் கிறிஸ்தவர்களாகுகையில் மறுபடி பிறந்த பாவிகளால் ஏற்படுத்தப்படும் தீவிரமான மாற்றமானது ஒரு பத்திரிக்கைக் கட்டுரையில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது: "மயிரிழை அளவே உள்ள பீச் விதையொன்றை, அது பின்பு வளர்ந்து பெருகி, மணமிகு மலர்க் கொத்துக் களும், இனிய கனிகளும் நிறைந்து காணும் மரத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள்."[1] அர்ப்பணித்த கிறிஸ்தவர்களால் பரப்பப்படும் நறுமணமானது அவர்களின் தோழமையை மற்ற மக்கள் நாடச் செய்கிறது.

இருப்பினும், தேவன் பாவிகளுக்கு நற்கனி வளர்ப்பதெப்படி என்று போதித்துள்ள பிறகும் கூட, அவர்கள் யாவரும் தவிர்க்க இயலாத வகையில், கடைசியில் இறந்து போகின்றனர். பரலோகம் ஒன்றில்லையென்றால், அந்த மக்கள் மரித்த நிலையிலேயே இருப்பார்கள், அது அவர்களைப் படைத்தவரை அற்பமானவராய்க் காணச் செய்யும். அவர் ஏன் மக்களைப் படைத்து, உன்னத கனிகளை உற்பத்தி செய்வதெப்படி என்று அவர்களுக்கு உபதேசித்து, பிறகு அவர்கள் என்றென்றும் மரிக்கும்படி விட வேண்டும்? ஜெனரல் மோட்டார்ஸ் நிர்வாகிகள் இப்படிப்பட்ட ஒரு தேவனைப் பார்க்கிலும் அதிகம் அறிவுடையவர்களாய் இருப்பார்கள், ஏனெனில் அவர்கள் அழகிய மற்றும் வலிமை நிறைந்த கேடிலாக் கார்களை உண்டாக்கி, பிறகு அவற்றை டெட்ராய்ட் நதிக்குள் தள்ளி மூழ்கடிப் பதற்காக பொறியாளர்களையும் திறன் மிகுந்த தொழிலாளர்களையும் வேலைக்கு அமர்த்துவதில்லை!

## பரலோகம் இல்லையென்றால் தேவன் ஒழுக்கமற்றவர் என்றாகின்றது

மக்களுக்கு மாபெரும் அன்பு பற்றிய தேவனுடைய போதனையில் அவர் இயேசுவைக் கொண்டு, "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலு மில்லை" (யோவா. 15:13) என்று கூற வேண்டியிருந்தது. இரண்டாம் உலகப் போரில், அமெரிக்க வீரர்களின் பதுங்கு குழி ஒன்றில் ஜெர்மானியர்களால் செயல் துடிப்புள்ள கைக்குண்டு ஒன்று வீசப்பட்ட பொழுது இப்படிப் பட்ட அன்பு காட்சிப் படுத்தப்பட்டது. அது வெடிப்பதற்கு முன்னர், ஒரு போர் வீரர் அந்தக் குண்டின் மேல் கவிழ்ந்து கொண்டார். அது வெடித்த பொழுது உடனடியாக அவர் கொல்லப்பட்டார், ஆனால் அவர் தமக்கு இருபுறமும் இருந்த வீரர்களைக் காப்பாற்றியிருந்தார். பரலோகம் இல்லையென்றால், வீரமும் சுயநலமின்மையும் கொண்ட அந்த வீரர், கொலைகாரனான ஹிட்லர் அடைந்த அதே பலனைத்தான் பெற்றிருப்பார், இருவரும் என்றென்றைக்கும் மரித்தவர்களாயிருப்பார்கள். மக்களை இவ்விதமாக நடத்தும் ஒரு தேவன் ஒழுக்கமற்றவராகவே இருப்பார்.

## பரலோகம் இல்லையென்றால் தேவன் கொடியவர் என்றாகின்றது

தேவன் மனிதருடைய இருதயங்களில் "நித்தியத்தை வைத்திருக்கிறார்" (பிர. 3:11). அதன் காரணமாக, ஒழுக்கமுள்ள எந்த நபரும் என்றென்றும் மரிக்க விரும்புவதில்லை, ஆனால் மகிழ்ச்சியான, முடிவற்ற இருப்பான "நித்திய வாழ்வுக்கு" (தீத்து 1:2) ஏங்குகின்றார். தேவன் அப்படிப்பட்ட மகிழ்ச்சியான ஒரு எதிர்காலத்திற்காக ஒரு இடத்தை அளித்திருக்கவில்லை யென்றால், நமது இருதயங்களில் நித்தியத்தை வைத்து வைக்க அவர் கொடியவராகவே இருக்கவேண்டும்.

## பரலோகம் உள்ளதென்றால் நரகமும் உள்ளது

அறிவற்றவராகவோ, ஒழுக்கமற்றவராகவோ அல்லது கொடிய வராகவோ இல்லாத தேவன் நம் எல்லாரைக் காட்டிலும் அதிகம் ஞானமுள்ளவராயிருந்து, சில மக்களுக்கு "நித்திய அக்கினி" என்ற இடமே சரியானது (மத். 25:41) என்று அறிந்துள்ளார். பரலோகத்தைப் போலவே நரகமும் ஏன் உண்மையான ஒரு இடமாய் உள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ளாவிட்டாலும், அவரை நியாயந்தீர்க்கவோ அல்லது விமர்சிக்கவோ நாம் துணியக்கூடாது என்பதற்கு தேவனுடைய நற்பண்பு பற்றி நாம் பல ஆதாரங்களைக் கண்டிருக்கின்றோம்.

அவர் நம்மை இருக்கச் செய்ய வேண்டியது அவருக்குத் தேவையில்லா திருந்தும் அவர் அதைச் செய்துள்ளார், மற்றும் இந்த உலகம் முழுவதும்

*விரிவாகியுள்ளது (யோவா. 3:16; 1 யோவா. 2:2) ஒரு அன்பை அவர் பாவிகளுக்காக (ரோமர் 3:23) காட்சிப்படுத்தியுள்ளார். அவர் அன்பாகவே இருக்கின்றார் (1 யோவா. 4:8, 16) மற்றும் நியாயத்தீர்ப்பு நாளில் அவர் தவறிழைக்க மாட்டார். மக்களை நரகத்திற்கு அனுப்புவதென்பது அவரது இருதயத்தைத் துக்கப்படுத்தும் (எசே. 33:11).*

குறிப்பு

[1]David Van Biema, "Does Heaven Exist?" *Time* (24 March 1997): 70-78.